
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 895, 894**
**Published on Oct 8, 2016**

**பொருளடக்கம்**

நிலையான உறுதியான நங்கூரம் ............ 2

உறுதியான தீர்மானம் ................10

தரித்து நில்லுங்கள் ...............16

**BS Tamil Version - 36** **2016**

# நிலையான உறுதியான நங்கூரம்

*An Anchor sure and steadfast*

**"உங்கள்விசுவாசம்மனுஷருடையஞானத்திலல்ல,தேவனுடையபெலத்தில்நிற்கவேண்டும்"1 கொரி. 2:4.**

பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசம் உறுதியாக வேதாகமத்தின்மீது கட்டப் பட்டதாகவும், தாங்கப்படுவதாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மனுஷருடைய முரண்பாடான கோட்பாடுகளும், போதனைகளும் எப்போதுமே நாம் வழிதப்பும்படி நடத்திவிடும். நாம் "**கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படவேண்டும்,**" மேலும் "**நீங்கள் பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள், ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத் தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**" *(எபே. 6:10-12).* "**தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொண்டால் மாத்திரமே**", நாம் "**தீங்கு நாளிலே அவைகளை எதிர்க்கவும் (நாம் ஜீவிக்கிற இந்த நாளில்) சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும்**" *(வச.13)* முடியும்.

அப்போஸ்தலன் பவுல், "**விசுவாசம் கேள்வி யினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்**" *(ரோம. 10:17)* என்று நமக்குச் சொல்கிறார்; மேலும் அவர் "**விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே**" என்றும், "**விசுவாசத்தினலே வராத யாவும் பாவமே**" என்றும் கூறுகிறார். *(2 தெச. 3:2; ரோம. 14:23).* "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.**" *(எபி. 11:6).* ஆனால் "**தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (சாத்தான்) அவர் களுடைய மனதைக் குருடாக்கினான்**" *(2 கொரி. 4:4).* பொதுவாகச் சொல்வதென்றால், மெய்யாகவே




இருள் (விசேஷமாக தேவனையும் தெரிந்தெடுக்கப் பட்டவர்களுக்கும் மற்றும் தெரிந்தெடுக்கப் படாதவர்களுக்குமான அவருடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் காரியங்களைக் குறித்த அறியாமை) பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருக்கிறது. *(ஏசா. 60:2).*

"**நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.**" *(1 யோவா. 5:19).* நாம் புறஜாதி யாரான உலகத்தாருடைய மனமும், இருதயமும் பின்தங்கிய நிலைமையில் இருப்பதைப் பார்க்கும் போது அதிக திகைப்படைகிறோம். கிறிஸ்தவ மண்டலமும் அதன் திரளான தப்பறைகளான எரிநரகத்தில் நித்திய வேதனை, மரித்தவர்களின் உணர்வுள்ள நிலை, மனித ஆத்துமா சாவாமை யுள்ளது போன்றவைகளை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அறியாமை, தப்பறை மற்றும் இருண்ட யுகங்களின் மூடப் பழக்கங்களிலிருந்து விடுதலை பெற மனுக்குலத் தார் எடுக்கும் முயற்சிகளுங்கூட கவனிக்கப் படுகிறது. சாத்தான் எப்படிப்பட்ட வல்லமையை செயலில் பயன்படுத்தியிருக்கிறான்! *வெளி. 12:9.* "**உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும்**


**COURTESY BY :**

**The Bible Standard** -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

**சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப் பட்டது.....**" தேவனுடைய வசனமும், ஆவியும் எந்த அளவுக்கு பிரகாசிப்பித்தலையும், பெலத்தையும் கொடுத்திருக்கிறதோ, அந்த அளவுக்கு மட்டுமே எதிராளியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அப்போஸ்தலன் நமக்கு எதிராளியான வனுடைய வஞ்சகத்தைக் குறித்து, "**அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.**" *(2 கொரி. 2:11)* என்றும், அவனுடைய சூழ்ச்சியான திட்டமிடப்பட்ட கட்டுக்கதைகளையும் நினைவுப் படுத்துகிறார். ஏற்கெனவே சொல்லப்பட்டபடி, சத்திய வெளிச்சத்தைப் பொருத்தமட்டில் அவன் நிறைவேற்றிய வஞ்சகத்தின் காரணமாக மனுஷருடைய மனங்களை குருடாக்கியதினால் சாத்தானே இந்த உலகத்தின் தேவன் அல்லது ஆளுகைசெய்கிறவனாயிருக்கிறான் என்று அவர் அறிவிக்கிறார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும், அதாவது மனுக்குலத்தாருடன் மாத்திரம் போராடவில்லை, ஆனால் மெய்யான சபையின் இந்த எதிராளி களுக்கும் அப்பாற்பட்டு, எதிராளியின் ஞானம் மற்றும் சூழ்ச்சியுடனும் அத்துடன் அவனுடைய அநேக பிரதிநிதிகள் மற்றும் ஆவிக்குரிய மண்டலத்திலுள்ள விழுந்துபோன தூதர்களுடனும் போராடுகிறோம் என்று உறுதிப்படுத்தியுள்ளார். பிந்தினவர்கள் மிக அதிகமான பலம் வாய்ந்தவர்கள்.

கர்த்தர் அறியாமையாகிய திரையை விலக்கிவிட்டு மிகுதியான அறிவூட்டுதலைக் கொடுக்கத் தொடங்கியது முதற்கொண்டு அச்சடித்தல், தொலைக்காட்சிகள், கம்ப்யூட்டர்கள், ஸ்மார்ட் ஃபோன்கள் போன்ற கண்டுபிடிப்பு களையும் உலகம் முழுவதும் சமூக வலைதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய திறனையும் கொண்டு வந்திருக்கின்றன. நம்முடைய எதிராளியும், அவனுடைய விழுந்துபோன தூதர்களும் இப்போது இதுவரை இல்லாத அளவுக்கு சுறுசுறுப்பாக இந்த கண்டுபிடிப்புகளின் பயன்பாடுகளைச் சீரழித்து வருகின்றனர். அவன் அந்தகாரப்பிரபுவாயிருப்பதாலும், மனுக் குலத்தின்மீது அவனுடைய வஞ்சக வேலை யாவும் அறியாமையாலும், இருள் மற்றும் இருட்டடிக்கப் பட்ட சூழ்நிலைகளாலும் அனுகூலமடைந் திருக்கிறது. ஆகவே இருண்ட யுகங்களின் மேலுள்ள மூடுதிரையை விலக்குவதற்கு எடுக்கப்படுகிற




ஒவ்வொரு காரியமும், மனுக்குலத்தாரை சாத்தானின் கண்ணிகளான அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் வஞ்சகத்திலிருந்து விடுவிக்க ஏதுவாயிருந்தது. அதனால் நம்முடைய எதிராளியும், அவனுடைய விழுந்துபோன தூதர்களும் மிகவும் சுறுசுறுப்பாகவும், நாகரீகமடைந்த தேசங்களில் இன்னும் அதிக தீவிரமாகவும் புறஜாதியார் மத்தியிலும்கூட அவர்கள் தேவைக்கேற்ப மிகவும் சுறுசுறுப்பாகவும், மிகவும் எச்சரிக்கை யாகவுமிருப்பதையும் நாம் காண்கிறோம். அவர்களின் சாமர்த்தியமான வஞ்சகங்கள் உலகளாவியவை.

நமது கர்த்தர் தம்முடைய உவமைகளில் ஒன்றில் *(மத். 24:43)* தற்காலத்தில் சாத்தானை, வீட்டு எஜமானாக குறித்துக்காட்டுகிறார். அதாவது உலகம் முழுவதும் அவனுக்கு சொந்தமானது அல்லது அவனுடைய அதிகாரம் மற்றும் ஆட்சிக் குட்பட்டதாக இருக்கிறது. இது சாத்தானை அவர் "**இந்த உலகத்தின் அதிபதி**" *(யோவா. 12:31; 14:30)* என்று உபயோகித்ததற்கு ஒத்த வருணனையாக இருக்கிறது. நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையையும், ஒரே மெய்யான சபையை கூட்டிச் சேர்ப்பதையும், இப்போதிருக்கும் தீமையான நிறுவனங்களை இந்த யுகத்தின் முடிவில் நொறுக்குவதையும் சுட்டிக்காட்டுகிறபோது, அவர் சொல்கிறார், திருடன் எந்த ஜாமத்தில் வருவான் என்று வீட்டெஜமான் (சாத்தான்) அறிந்திருந் தானானால் அவன் தன்னுடைய வீட்டையும், அதிலுள்ள பொருட்கள் முழுவதையும் கொள்ளையடியாதபடி அழிவிலிருந்து தடுக்கக் கூடிய வழிமுறைகளை எடுக்க ஜாக்கிரதையாக இருந்திருப்பான். ஆகையால் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையுடன் தொடர்புடைய அநேக காரியங்கள், அவைகள் நிறைவேறும் காலம் வரைக்கும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக் கின்றன. யேகோவா பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைக்கு காலங்களையும் வேளைகளையும் அறிந்து கொள்ளும்படியான சிலாக்கியத்தை அருளியிருக்கிறார்,

“**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்:**” “**கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது, அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.**” *(உபா. 29:29; சங். 25:14).*




*ஆயினும் நம்முடைய கர்த்தர், பிதாவினால் குறிக்கப்பட்ட அந்த சமயத்தில், அவர் வந்து முதலாவதாக, பலவானாகிய சாத்தானைக் கட்டுவார், அதன் பின்பு அவனுடைய பொருட்களை கொள்ளையிட்டு அவனுடைய ஒழுங்கு முறைகளையும் நிறுவனங்களையும் கவிழ்த்துப் போடுவார். அதனால் அவைகளை கவிழ்த்துப் போடுவதில் புதிய ராஜாவும் வெளிச்சத்தின் பிரபுவாகிய நம்முடைய கர்த்தர், பாவம் மூடநம்பிக்கைகள் மற்றும் இருள் ஆகியவற்றிற்கு அடிமைகளாயிருக்கும் எல்லாருக்கும், தேவனுடைய வார்த்தையால் நெடுங்காலமாக முன்னுரைக்கப் பட்டதும், தேவனுடைய உண்மையான ஜனங்கள் எல்லாராலும், நம்பியிருந்ததும், ஜெபித்து வந்ததுமான வெளிச்சத்தையும் ஆசீர்வாதங் களையும் கொண்டுவருவார்.* “**உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப் படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக**” *(மத். 6:10).*

*வெளிச்சத்தின் அதிபதி இருளின் அதிபதியைக் கட்டுகிற வேலையை ஏற்கனவே தொடங்கி விட்டார் என்பதையும், இப்போது அந்த முக்கியமான காலத்தில் நாம் வாழ்ந்து கொண் டிருக்கிறோம் என்பதையும் நாம் வேத வாக்கியங்களிலிருந்து புரிந்து கொள்கிறோம். சாத்தான் சாந்தத்துடன் பணிந்து போவான் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. சாத்தான் என்ற இந்த பெயர் நம்முடைய தனிப்பட்ட எதிராளியாகிய பிசாசானவனுக்குப் பொருந்துகிறதால், அதற்குப் பதிலாக பொதுவான கருத்தில், உலகத்திலிருக்கிற தீமையான மற்றும் அநீதியான எல்லா அமைப்புகள் மற்றும் செல்வாக்குகளையும், எவ்வகையிலும் அறியாமைக்குரிய அவனுடைய சில ஏமாற்று களையும் இது குறிக்கிறது. எனவே பிசாசு எனப்பட்ட பழைய பாம்பாகிய சாத்தான் கட்டப்படுதலைப் பற்றி நாம் வாசிக்கும்போது (வெளி. 20:2) பல நூற்றாண்டுகளாக மனுக் குலத்தை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த எல்லாத் தீமையான செல்வாக்குகளையும், எல்லாவித பாவமான மனப்போக்குகளையும், எல்லா அநீதிகள் மற்றும் பொய்யானவைகளையும் நாம் சரியானபடி மனதில் கொண்டிருக்க வேண்டும்.*

## ஒரே சமயத்தில் நடக்கும் கட்டுதலும், கட்டவிழ்த்தலும்

*சத்திய வெளிச்சத்தை விடுவிக்கிற எதுவும் அதே நேரத்தில், அதே அளவில் இருளைக் கட்டுகிறது,* “**சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற் காலத்திலே களிப்புண்டாகும்.**”*(சங். 30:5). உலக முழுவதும், அதனை ஒடுக்குகிற சில தீமைகளுக்கு எதிராக விழித்துக் கொண்டிருக்கிறது. எல்லா அநியாயத்துக்கும் எதிராக ஒரு பேரலை பரவி வருகிறது. அது ஜனங்கள் எல்லாருடைய நலன்களுக்கு அனுகூலமாகவும், தங்களுடைய சுய நலத்துக்காக அநேகரை சுரண்டிப் பிழைப்பதற் கென்று திட்டம் நிறைவேற்றுகிற சிலருக்கு எதிராகவும் செயல்படுகிறது. பெரும்பாலான தேசங்களில் அறிவு மிகவும் பெருகிவருவதுடன் ஜனங்கள் தங்களுடைய மனித உரிமைகள் மற்றும் விடுதலைகளுக்காக விழித்துக் கொண்டு, அவற்றைக் கைப்பற்றிக் கொள்கிறார்கள், அவைகளில் சில நாடித்தேடப்பட்டு, பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும், அநேக ஜனங்கள் இன்னும் அதற்கு ஆயத்தமாக இல்லை. ஆம் அந்தகாரத்தின் வல்லமை அதன் அதிகாரத்தை இழந்து வருகிறது; அதன் விலங்குகள் மனுஷருடைய மனங்களில் உடைக்கப்படுகிறது. இது வேத வாக்கியங்கள் விவரிக்கிறபடி,* “**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்.... ஏனெனில், உலக முண்டானது முதல் இதுவரை சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்**” *(தானி. 12:1; மத். 24:21) என்ற நிலைமையைக் கொண்டுவந்திருக்கிறது என்று நாங்கள் சொல்கிறோம்.*

*பலவானாகிய எதிராளியும், அவனுடைய எண்ணற்ற கூட்டாளிகளும், வல்லமை மற்றும் சிலாக்கியங்களில் வலுவடைந்து கொடூரமான*




"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்."- மத். 24:21.

*மரணம் தங்களுக்கு நேரிடும் வரைக்கும் உறுதியாக நிலைத்து இருப்பார்கள். இது சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் அதிகமான துயரத்தை ஏற்படுத்தும் என்பதை அர்த்தப்படுத்துகிறது என்பதையும் கூட அறிவிக்கிறோம். மிக பயங்கரமான அராஜக காலத்திற்கு அப்பால் பூமியின் வம்சங்களை யெல்லாம் ஆசீர்வதிப்பதற்காக வேத வாக்கியங்கள் மிகத் தெளிவாக விவரித்துக் காட்டுகிற நீதியும் சமாதானமும் அன்பும் ஆளுகை செய்யும் பொற்காலம், ஆயிர வருட யுக ராஜ்யம் வருகிறது என்பதை நாம் காணக் கூடியவர்களாக இருப்பதால் நாம் எவ்வளவு நன்றியுடன் இருக்கிறோம்! (ஆதி. 12:1-3; 22:16-18; கலா. 3:7-9, 16,29).*

*அந்த எதிராளியும், அவனுடைய பல்வேறு பிரதிநிதிகளும், தற்காலத்தில் மித மிஞ்சிய அளவு செயல்படுகிறவர்களாயிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம் என்பது மட்டுமல்ல, ஆனால் வேத வாக்கியங்கள் குறிப்பாக காரியங்கள் இப்படித்தான் இருக்கும் என்றும், கர்த்தரே எதிராளியை நசுக்கக்கூடியவர் என்றும் மற்றபடி அவனுடைய செயல்பாடுகளை விசேஷித்த நோக்கங்களுக்காக அவர் அனுமதிப்பார் என்றும்; ஒரு பகுதி தேவனுடைய ஜனங்களை பரீட்சிப்பதற்கும், கொழித்தெடுப்பதற்கும் (ஆபிரகாமின் வித்தை தேர்ந்தெடுப்பதற்காக), மறுபகுதி பொதுவான உலகத்தாரின் ஒழுங்குபடுத்தும் பாடங்களுக்காகவும் இருக்கும் என்றும் நம்மை எச்சரிக்கின்றன. உதாரணமாக இன்றைய காலத்தைப் பற்றி அப்போஸ்தலன் கூறும்போது,* **"ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் (தப்பறை) பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்"** *(2 தெச. 2:11,12) என்று சொல்கிறார்.*

## தேவனுடைய பிள்ளைகளுக்கான பாதுகாப்பு


*தேவனுக்கு தன்னை முற்றிலும் பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளை, நங்கூரம் பாய்ச்சிய ஒரு கப்பலாக சித்தரிக்கப்படுகிறான், அந்த நங்கூரம் என்பது பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே பெற்றிருக்கிற நம்பிக்கையைக் குறித்துக் காட்டுகிறது. அது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது! அந்த நங்கூரத்தை ஒரு சங்கிலி பிடித்துக் கொண்டிருக்கிறது. அது வாக்குத்தத்தமும் ஆணையுமாகும். பூரண பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளையாகிய கப்பலுடன் இணைக்கப்பட்டிருக்கிற அந்த சங்கிலி நம்முடைய விசுவாசமாகும். சூறாவளிகள் ஊளையிடுக்கின்றன. காற்றுகள் வீசியடிக்கின்றன; அலைகள் கப்பல் மீது புரள்கின்றன. ஆனால் அந்தச் சங்கிலி உடைந்து போகாதவாறு செய்யப்பட்டுள்ளது, மேலும் அந்த நங்கூரமும் அசைந்து கொடுக்காது,* **"இரண்டுமே நிலையானதும், உறுதியானதுமாகும்."** *இந்த காரணத்தினால் கப்பல் இழுப்புண்டு போகாது. கப்பலின் முன்பகுதி அலைகளுக்கெதிராக இருந்தாலும் அது அமிழ்ந்து போகாமல் காக்கப்பட்டிருக்கிறது. கப்பல் பாதுகாப்பாகவும், உறுதியாகவும் இருக்கிறது, ஏனெனில் கப்பலின் நங்கூர ஆதாரம் உறுதியாயிருக்கிறது. அந்த நங்கூர ஆதாரமானது அதிக பெலத்துடன் இருப்பதால், எந்த வல்லமையும் அதை இழுத்துச் செல்லவோ அல்லது உடைக்கவோ முடியாது,* **"நிலையான உறுதியான நங்கூரம்."**

*நம்பிக்கையின் ஆதாரமாக இருப்பதற்கு இதைக் காட்டிலும் வலுவான வேறு ஏதாவது நமக்கு தேவைப்படுமா? வலுவான எந்தக் காரியத்தை தேவன் நமக்குக் கொடுக்கக்கூடும்? அன்பிலும் சிறுபிள்ளைகளைப் போன்று விசுவாசத்திலும் நிலைத்திருக்கிற இருதயமுள்ளவர்களுக்கு பலமான வேறு எதுவும் தேவையாயிருக்காது. தேவனுடைய ஆணையுடன் பிணைக்கப்பட்ட வாக்குத்தத்தமே, நம்முடைய விசுவாசத்தின் நோக்கமாகவும், நம்முடைய பெலத்தின் பிறப்பிடமாகவும், ஆகையால் நம்முடைய நம்பிக்கையின் அஸ்திபாரமாகவும் நிலைத்திருக்கிறது. தேவன் நம்முடைய நன்மை தீமையான சூழ்நிலைகளிலும் உண்மையுள்ளவராயிருப்பார். நங்கூரம் கப்பலை புரட்டிப் போடாது, அதைப்பிடித்திருக்கிற சங்கிலியும் அறுந்து போகாது, ஏனெனில் அது சர்வ வல்லவரால் தாங்கப்பட்டிருக்கிறது. தேவனிடத்தில் ஏராளமாயிருப்பதால் கைவிடப்படும் ஆபத்து இல்லை. அவர் தமது வார்த்தையையும், தம்முடைய*

ஆணையையும் கொடுத்திருக்கிறார். வானத்திலோ அல்லது பூமியிலோ அல்லது ஆகாயத்திலோ எந்த வல்லமையும், தேவனுடைய உத்தமத்தை உடைக்காது அல்லது உடைக்க முடியாது, என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். "**கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.**" ஆம், துதியும், நம்பிக்கையும், விசுவாசமும் அவரில் வைத்திருங்கள். அதற்கு அவர் பாத்திரமானவராயிருக்கிறார்!

தங்களை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்து அவருடைய பக்கத்திலிருக்கிறவர்களாகவும், வாக்களிக்கப்பட்ட அவருடைய பாதுகாப்பின் கீழ் இருக்காத எவரும் நிச்சயமாகவே, எதிராளியின் வல்லமையிலிருந்தும், பிசாசுகளின் ஆதிக்கத்தி லிருந்தும், பாதுகாப்பாக இருக்க முடியாது. அவருடைய பாதுகாவல் பெருமளவில், இருளிலிருந்து பாதுகாக்கும் சத்திய வெளிச்சத்தின் அறிவைக் கொடுப்பதின் மூலமாகவும் இருக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். மரித்தோர் மரணமடைந்தவர்கள் என்றும், உயிர்த்தெழுதல் வரைக்கும் அவர்கள் மரித்தவர்களாகவே இருப்பார்கள் என்றும் அறிந்தவர்களும், ஆவி மீடியங்கள் மூலமாக மரித்தவர்கள் உயிருள்ளவர்கள் போல காட்டுவது போன்றவைகளைச் செய்வது பிசாசுகள்தான் என்று அறிந்தவர்களும் விசேஷமாக தங்கள் அறிவினால், ஆயிரக்கணக்கானவர்களை கண்ணியில் அகப்படுத்தி, அதன் முடிவில் ஆயிரக்கணக்கானோரை ஆபத்தான தப்பறை களுக்குள்ளாக விழச்செய்யும் அநேக வஞ்சகங் களிலிருந்து காக்கப்படுகின்றனர். பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்களாகிய நாம்: "சாத்தானே, நீ எனக்கு பொல்லாப்பாக இருக்கிறாய், ஏனெனில் நீ தேவனுடைய காரியங்களைப் பற்றி சிந்தியாமல், மனுஷருடைய காரியங்களையே சிந்திக்கிறாய் என்று அறிவிக்க வேண்டும்.

விழுந்துபோன தூதர்கள் தற்காலத்தில் பெருமளவில் சுதந்திரம் பெறவும், அவை தந்திரமாக ஏமாற்றி, மனித உருவெடுக்க அவர் விதித்த தடையை பயனற்றதாக்கும் ஒரு வழிவகையைக் கண்டுபிடிக்கவும் கர்த்தர் அனுமதிப்பார் என்று வேத வாக்கியம் தெரிவிக் கிறது. ஓ, இந்த உருமாற்றங்கள், அநேக பிசாசுகளின் சார்பாக சம்பவிக்கும், அத்துடன் இவை தீவிரமான செயற்கருவியாகவும், அழிவுண்டாக்கும் வல்லமையுள்ளதாகவும் இருக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் தேவனிடத்தில் நம்பிக்கை




"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."- 2 தீமோ. 2:15

கொண்டிருக்கிற அவருடைய ஜனங்கள் பாதுகாப்பாயிருக்கிறார்கள். "**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.**" (சங். 34:7). போராட்டத்தின் முடிவில் சாத்தான் முழுவதுமாக கட்டப்படுவான் என்று கர்த்தர் உறுதியளித்திருப்பதை அறிந்து கொள்வது ஆறுதலாக இருக்கிறது!

ரஸல் போதகர் தம்முடைய புத்தகங்களில் (SIT S1, பக். 69; Z 4609, Z4695) நம்முடைய கர்த்தர், சாத்தான் என்கிற தனி நபரைக் கட்டுவதையும் (வெளி. 20:1-3), அதனால் சாத்தானுக்கு விழுந்து போன தூதர்களை முன்பு இருந்தது போல இனி ஒருபோதும் அடக்கி ஆள முடியாது என்றும், அதன் பலனாக அவனுடைய அரசாட்சியில் மிகப்பெரிய குழப்பங்களும், உபத்திரவங்களும் உண்டாகும் என்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார். 1878-ல் நம்முடைய கர்த்தர் "**வீட்டுக்குள் புகுந்து அவன் உடைமைகளைக் கொள்ளையிட தொடங்கிவிட்டார்.**" (மத். 12:29). சாத்தானுடைய அமைப்பைக் கட்டுதல் படிப்படியாக இருக்கும், அது இன்னும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. (E2, பக். 125 பார்க்கவும்). ஒவ்வொரு வழியிலும்-சத்தியமாகிய-மிகப்பெரிய சங்கிலி அவனுடைய செயலைக் கட்டுப்படுத்தும், அதனால் அவனுடைய கை கால் அல்லது வாய் போன்றவைகள் ஆயிரவருட யுகத்தின்போது ஜாதிகளை வஞ்சிக்கமுடியாத நிலையில் இருக்கும். அவன் பாதாளத்தில் தள்ளப்படுவது, அவனுடைய போக்கில் எந்த ஒரு ஒத்தாசையும் வழிவகையும் இல்லாமல் வெறும் யூகங்களுக்கு விடப்பட்டு, கூடுதலான சத்தியத்தை அறிந்து கொள்வதிலிருந்து விலக்கிவைக்கப்பட்டிருப்பதைக் குறித்துக் காட்டுகிறது; மேலும் அவன் சுயமாக உருவாக்கிக் கொண்ட இருளாகிய தப்பறைகளில் வைக்கப் படுவது, அவன் பாதாளத்தில் அடைக்கப் பட்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது, அது

நிச்சயமாக வேதனை நிறைந்திருக்கும், இதை நிறைவேற்ற, கர்த்தருடைய பக்கத்தில் பல்வேறு காரியங்கள் அவசியமாயிருக்கும்: (1) சாத்தானை பூமியிலிருந்து மிக அதிக தொலைவுக்கு அகற்றுவதன் மூலம், அவன் இங்கே ஆயிர வருட யுக அரசாட்சியின்போது என்ன நடக்கிறது என்பதை அறியாதிருக்கச் செய்வது, (2) அந்த காலப் பகுதியின்போது அங்கே அவனை மனுக்குலத் தாரிடமிருந்து தூரமாக விலக்கி வைப்பது. இது அவனை ஆயிர வருட யுக அரசாட்சியின் போது மனுக்குலத்தாருக்கு கொடுக்கப்படுகிற உலக சம்பந்தமான மற்றும் மதசம்பந்தமான சத்தியங்களைக் கற்றுக் கொள்வதிலிருந்து தடுத்துவிடும்; அத்துடன் மனுக்குலத்தாருடன் தொடர்பு கொள்ளாதவாறு அவனைத் தனிமைப்படுத்தி, அவர்களில் எவரையும் அவன் வஞ்சிக்க சந்தர்ப்பம் கொடாமல் இருப்பது.


சில கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கவனமாக படிக்கிறார்கள், "**சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களாக**" (2 தீமோ. 2:15) "**எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்கிறவர்களாக**" (1 தெச. 5:21) இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைத் தங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுகிறார்கள், அவர்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும், சாந்தத்தோடும், வணக்கத்தோடும், உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார்கள். (1 பேது. 3:15). அவர்கள் நன்கு உறுதிபடுத்தப்பட்ட விசுவாசத்தையும், நித்திய ஜீவனுக்கேதுவாக வேத வாக்கியத்தின் அடிப்படையிலான நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களைக் கைவிடாது, கடுமையான சூறாவளி போன்ற புயல்கள் மத்தியிலும் நிலைகுலையாது அவர்களைத் தாங்கும். அவர்களுடைய நங்கூரம் நிலையாகவும், உறுதியாகவும் இருக்கிறது.

மற்ற கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியின் மீதுள்ள தங்கள் பிடியைத் தளர்த்திக் கொண்டார்கள். அவர்கள் கிருபையிலும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவிலும் வளருவதை நிறுத்திக் கொண்டு, குழந்தைகளாக இருப்பதில் திருப்தியுள்ளவர் களாயிருக்கிறார்கள். அவர்கள் மிக எளிதாக துன்மார்க்கரின் தப்பறையினால் இழுத்துச் செல்லப்பட்டு, தங்கள் உறுதியிலிருந்தும் விழுந்து விடுகிறார்கள். (எபி. 5:12-14; 2 பேது. 3:17,18).




அவர்கள் மிக இலகுவாக, "**மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிருப்பது**" ஆச்சரியமில்லை! (எபே. 4:14). அவர்கள் தேவனைக் காட்டிலும் சந்தர்ப்பம் அல்லது அதிர்ஷ்டத்தையே நம்பு-கிறார்கள். உடைக்க முடியாத சங்கிலியாகிய சத்தியம் மற்றும் உறுதியான அஸ்திபாரமாகிய தேவனுடைய வார்த்தைக்கு பதிலாக, அவர்கள் ஜீவியத்தின் புயல்களுக்கு மத்தியில் எளிதில் அறுந்து போகக்கூடிய கயிறான தப்பறை மற்றும் மூட நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரதிஷ்டை செய்திருக்கிற கிறிஸ்தவன் தேவனுடைய வார்த்தையில் இருந்து தனக்குரிய பெலத்தை எடுத்துக் கொள்கிறான், வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய வார்த்தை, "**அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது,**" என்ற நிச்சயத்தை நமக்கு தருகிறது. (ரோம. 8:28). கர்த்தருடைய ஜனங்கள் சில காலம் இந்த வழியில் கடந்து வந்தவர்களாயிருந்தாலும்கூட, விசுவாசத்தின் மிகப்பெரிய பாடங்களில் ஒன்றான இதனைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசிய மாயிருக்கிறது. நாம் ஜீவிக்கிற இந்த காலங்கள் மிகவும் நிலையில்லாதவை, அத்துடன் தேவனிலும் அவருக்குச் சொந்தமானவர்கள் மீது அவருடைய தகப்பனுக்குரிய பராமரிப்பின் அக்கறையிலும் உறுதியான விசுவாசம் இல்லாத அநேக கிறிஸ்தவர்கள் அவரில் நம்பிக்கை வைத்திருப்பதை விட்டுவிடுகிறார்கள்; அவர்கள் தங்கள் சுய புத்தியைச் சார்ந்து கொண்டு, தங்கள் வழிகளி லெல்லாம் அவரை நினைத்துக்கொண்டால் அவர் தங்கள் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி. 3:5,6) என்பதை மறந்து விடுகிறார்கள். "**உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கை யாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.**" (சங். 37:5).




*தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற திட்டம் வைத்திருக்கிறாரா? என்று நாம் கேட்பது அவசியம். ஆம், தேவன் இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலுக்கு முந்தைய ஐந்து பிரதிஷ்டை செய்த வகுப்பார்களாகிய சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள் கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் ஆகியோரை முறையே சீயோன், மோரியா, அக்ரா, பெசித்தா மற்றும் ஒபேல் ஆகியவை மூலமாக அடையாளப்படுத்தியுள்ளார் - பரிசுத்த பெரும் பாதையில் தெரிந்தெடுப்புக்குட்படாதவர்களுக்கு உதவி செய்யும் விசேஷ கருவிகளாக இவர்களைப் பயன்படுத்துவார். சங். 72:3.* **“பர்வதங்கள் ஜனத்திற்கு சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.”** *தேவன் இந்த நோக்கத்திற்காக இழந்து பேனதைத் திரும்பக் கொடுத்தலுக்கு முந்தைய இந்த ஐந்து வகுப்பாரையும் உயர்த்துவார். பின்பு அங்கே சந்தேகப்படுவதற்கு எந்த காரணமும் இருக்குமா? எச்சரிக்கையாயிராத அல்லது - விசுவாசத்தில் பலவீனமுள்ள சில கிறிஸ்தவர்கள் புறமதத்தவர்களின் வழக்கங்களைப் பின்பற்றி தங்கள் மனங்களை தீமை விளைவிக்கும் செல்வாக்குகளுக்குத் திறந்து வைத்துக் கொண்டு, தம்முடைய மிகுதியான இரக்கத்தால் அவர்களை மிகுதியாக நேசித்ததின் காரணமாக, அவர்களுக்காக மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுத்தவரான (யோவா. 3:16; ரோம. 5:8-11) தங்களுடைய சிருஷ்டிகரையும், அவருடைய வசனத்தையும் நம்புவதைக் காட்டிலும் அதிகமாக, அதிருஷ்ட தாயத்து, குறி சொல்லுதல், தரிசனங்கள், ஜாதகங்கள் முதலியவற்றை நம்புகின்றனர்.*

*அப்போஸ்தலர் பவுல் தீர்க்கதரிசனமாக* **“பிற்காலங்களிலே ....... சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் (தீய ஆவிகள்) உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்”** *(1 தீமோ. 4:1) என்று முன்னுரைத்துள்ளார். அநேகர் இப்போது இந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் விதமாக, தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள மெய்யான விசுவாசத்திலிருந்து நிலைதடுமாறி விழுந்து சற்று முன்பு குறிப்பிட்டபடி விழுந்து போன தூதர்களின் பல்வேறான வஞ்சகங்களைப் பின்பற்றி சென்று கொண்டிருக்கிறார்கள். அநேக பெயர்ச்சபைகளின் கூட்டங்கள் “அறிவியல் ஆராய்ச்சிகளை,” ஆவியுலகத் தொடர்பு சம்பந்தப் பட்ட களங்களில் நடத்துகின்றனர், அவர்கள் அந்தகார மந்திர சக்தியின் பயிற்சிகளில் ஈடுபட்டு பிசாசுகளுடன் தொடர்பு கொள்ளுகிறார்கள். அவைகள், மரித்தவர்கள் இன்னும் உயிரோடிருப்பது போன்று காட்ட, அவர்களில் தங்களை மறைத்துக் கொண்டு,* **“அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை”** *(ஆதி. 3:4) என்ற சாத்தானின் ஆதி பொய்யை ஆதரித்து ஊக்குவிக்கின்றன. நாம் இந்த வார்த்தைகளை இயேசு சொன்னவற்றுடன் ஒப்பிடலாம்.* **“ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது, நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.”** *(யோவா. 6:63).*


*தன்னுடைய சுய ஞானத்தை நம்பியிருக்கிற கிறிஸ்தவன் உண்மையாகவே மிக ஆபத்தான நிலையிலிருக்கிறான், அதனால் அவன் தன்னை திருத்திக் கொள்வதற்காக, தேவன் அவனுக்கு ஒரு சிட்சையைக் கொடுக்கவேண்டியதின் அவசியத்தைக் காண்கிறார். நாம் தேவனிடத்திலும், அவருடைய அன்பு, மற்றும் நம்முடைய காரியங்கள் எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு வழி நடத்துகிற அவருடைய சர்வ ஞானத்திலும் விசுவாசத்தைத் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம், ஏனெனில்* **“நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்.”** *(சங். 37:23). கிறிஸ்தவன் எந்த அனுபவத்தையும் அதிர்ஷ்டமானது அல்லது துரதிர்ஷ்டமானது என்று ஒருபோதும் நோக்கக்கூடாது, ஆனால் அவன் கர்த்தருடன் நெருக்கமாக வாழும்போது அவனோடு சம்பந்தப்பட்ட காரியங்கள் அனைத்தும் அவரால் ஒழுங்குபடுத்தப்பட்டு, வழிநடத்தப்பட்டு*

*வருகின்றன என்பதை அவன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அவன் முழு மனதோடு விசுவாசத்துடன்,* “**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்: நான் தாழ்ச்சியடையேன்**” *(சங். 23:1) என்று சொல்லக்கூடியவனாக இருக்க வேண்டும்,* “**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே**” ***(எபி. 13:5).*** *எனவே* “**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்,**” “**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**” ***(பிலி. 4:6; 1பேது. 5:7).***

*எனவே நாம் சங். 107:30-ல் சொல்லப்பட்டுள்ள நாடின துறைமுகத்தை நெருங்குகிறோம்.* “**தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்?**” *ஆம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தொடங்கி தற்போது வரைக்கும் புயலில் சிக்கி மேலும் கீழும் புரட்டிப்போடப்பட்டு வருகிற இந்த பயணம் கடினமானதொரு பயணமாக இருந்து வருவதுடன், முடிவாக தேவனுடைய ராஜ்யத்தில் அவர்களை அவரவருக்குரிய சுதந்தரங்களுக்கும், சிலாக்கியங்களுக்கும் கொண்டு சேர்க்கும்; பரிசுத்தாவியைப் பெற்று தேவனால் போதிக்கப் பட்டு வருகிறவர்கள்* “**தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை**” ***(1 கொரி. 2:9)*** *என்பதான காரியங்களைக் குறித்து கொஞ்சமேனும் கற்றறிந்திருப்பவர்கள் எல்லாருக்கும் நிச்சயமாகவே இதுதான் நாடின துறைமுகமாயிருக்கிறது. இந்த கருத்தை எண்ணிப் பாருங்கள்: நாம் எப்படிப்பட்ட நிறைவான காரியங்களைப் பார்த்தாலும், நாம் நம்முடைய கர்த்தரின் வழிநடத்துதல் மற்றும் வழிகாட்டுதலின் கீழிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள் வதாலும், அத்துடன் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று நாம் அறிந்திருப்பதாலும் நாம் மனநிறைவுடனிருக்கலாம்.*

*ஜீவியத்தின் எல்லா பாடுகள் மற்றும் பரீட்சைகள் மற்றும் கஷ்டங்கள் மத்தியிலும் நாம் மனநிறைவுடன் இருக்கலாம், ஆனால் நாம் திருப்தியாக இல்லை. தற்போதைய பாடங்கள், அனுபவங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் முறைகள் யாவும் நம்மை ராஜ்யத்துக்கு தகுதிப்படுத்தவும் ஆயத்தப்படுத்தவும் அவசியமாயிருக்கின்றன என்பதை கர்த்தர் நமக்கு நிச்சயப்படுத்துவதால் நாம் மனநிறைவடைகிறோம். ஆனால், நாம் அந்த நித்தியமானவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே திருப்தியடைவோம். இப்போது அதைப் பற்றிய வாக்குத்தத்தம் அல்லது நம்பிக்கை மட்டுமே பெற்றிருக்கிறோம். நம்முடைய நம்பிக்கை எப்பேற்பட்டது; என்ன ஒரு மகிமையான நம்பிக்கை! அப்போஸ்தலன் இதைக் குறித்து, “ஆசீர்வாதமான நம்பிக்கை” என்றும், மேலும் அவர் அதனை நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து அவரது இரண்டாம் வருகையில் மகிமையாக வெளிப்படுவதோடுகூட இணைத் திருப்பதில்* ***(தீத்து 2:13)*** *எந்த ஆச்சரியமுமில்லை.*

*நம்முடைய பிதாவின் வார்த்தையை நாம் படித்து தேவனுடைய திட்டத்தின் ஆழமான காரியங்களைப் புரிந்து கொண்டுவருவதால், நம்முடைய நம்பிக்கை நித்தியமானதாயிருக்கிறது. இந்த நம்பிக்கை ஒரு ஆசீர்வாதமான காரிய மாயிருப்பதாக நாம் காண்கிறோமா?* “**நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்**” *(யோவா. 14:3) என்று நம்முடைய அருமை மீட்பர் சொன்னபோது அவர் தம் மனதில் ஒரு காரியத்தை வைத்திருந்தார். அப்போஸ்தலன் இந்த “ஆசீர்வாதமான நம்பிக்கை” நம்முடையது என்று மீண்டும் குறித்துக் காட்டி, இது நம்முடைய ஆத்துமாக்களுக்கு நிச்சயமும், உறுதியுமான ஒரு நங்கூரம் என்று சொல்கிறார். ஏனெனில் நாம் இயேசுவில் விசுவாசம் வைத்திருக்கிறோம். விசுவாசமே நங்கூரச் சங்கிலியாகும், அதன் மூலமாகவே தான் கர்த்தர் நமக்கு கொடுத்த மகிமையான வாக்குத்தத்தம் அல்லது நம்பிக்கை நம்மை உறுதியாகத் தாங்கி, பாதுகாத்து, ஜீவியத்தின் புயல்கள் மற்றும் சோதனைகள் மத்தியில் அசையாமல் இருக்கச் செய்கிறது. இயேசுவின் கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று நாமெல்லாரும் பாடுவோமாக:*




வாழ்வின் புயல்களிலும், மேகங்கள் தங்கள் போராட்டத்தின் காற்றுகளை,
விரிக்கையிலும் உந்தன் நங்கூரம் உறுதியாய்ப் பிடித்திருக்குமா?
வலுவான அலைகள் எழும்புகையில்,
நங்கூரச் சங்கிலிகள் இழுபடுகையில்,
உந்தன் நங்கூரம் இழுப்புண்டு போகுமா, அல்லது உறுதியாய் நிற்குமா?
அது பாதுகாப்பாக நங்கூரமிடப்படுமானால், அது கடும் புயலையும் தாங்கி நிற்கும்,
ஏனெனில் அது இரட்சகரின் கரத்தால் நன்கு பாதுகாக்கப் பட்டுள்ளது;
அவருடைய இருதயத்திலிருந்து உனது இருதயத்துக்கு கடந்து செல்லும் நங்கூரச்சங்கிலிகள்,
தெய்வீக பலத்தினால் அந்த கொடுங்காற்றை எதிர்த்து நிற்கும்.

# உறுதியான தீர்மானம்

*(Firm Resolve)*

**“நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு....” *தீத்து 2 : 1–15.***

இந்த பாடவசனத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒரு பாடம் உள்ளது. அநேகர் வாழ்க்கையின் சிறிய காரியங்கள் முக்கியத்துவமற்றது என்று சிந்திக்கும் மனப்பான்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஏதாவது ஒரு துறையில் முயற்சியினால் தேர்ச்சியடைகிற ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் அவன் பெற்ற திறமைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு உறுதியான நோக்க முடைய மனவலிமையின் பலன் என்பதை நிச்சயமாக கற்றுக்கொள்கிறான். மேலும் குறைவான முக்கியத்துவ மாக இருந்தாலும், பொதுவான காரியங்களில் கவனக் குறைவாகவும், உறுதியில்லாமலும் இருந்தால் முக்கிய மான காரியங்களிலும் மனவலிமையோடு இருப்பது அநேகமாக கூடாத காரியமாயிருக்கிறது. நன்மை யானாலும் தீமையானாலும் பழக்கம் என்பது ஒரு அற்புதமான ஆற்றலாகும். சிறுவனானாலும் சிறுமியா னாலும், புருஷனானாலும், ஸ்திரீயானாலும் சிறிய காரியங்களிலும் உண்மையில் அனைத்து காரியங் களிலும் சுயக்கட்டுப்பாட்டை கற்றறியாவிட்டால், மிக உயர்ந்ததும், மகா முக்கியத்துவம் வாய்ந்ததுமான காரியங்கள் மீதும் சுயகட்டுப்பாட்டை பயிற்சி செய்ய இயலும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதாவது, எல்லாவற்றிலும் “ஜெயங் கொள்பவனாக” இருக்க விரும்புகிற கிறிஸ்தவன், மனசாட்சியும் கோட்பாடும் தேவைப்படுகிற சிறிதும் பெரிதுமான எல்லாக் காரியங்களையும் ஒழுங்கு முறைப்படி கண்டிப்பாக முயற்சி செய்ய வேண்டும் என்று இந்தக் காரியத்தை கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தும்படிச் சொல்லலாம். சிறிய காரியத்திலும் மிகச் சிறிய காரியங் களிலும் உண்மையாயிருப்பவன் பெரிய காரியங் களிலும்கூட உண்மையோடு காணப்படுவதை எதிர் பார்க்கலாம். இந்த காரியத்தைக் குறித்து கர்த்தருடைய நோக்கத்தையும் இது நிச்சயப்படுத்துகிறது. கர்த்தருடைய பார்வையில் இக்கால ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தும் வருங்கால காரியங்களோடு ஒப்பிடுகையில் அற்பமாயிருக்கிறது. சிறிய காரியங்களிலும்கூட கோட் பாடுகள் மீது பொதுவாக அவர்கள் விசுவாச முள்ளவர்களாயிருப்பது மீதான அவர்களது மனோ பாவத்தையும், குணாம்சத்தையும் குறித்து சாட்சி கொடுப்ப தால், ராஜ்யத்தின் பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பதற்கு அவர் “**ஜெயங்கொள்கிறவர்களை**” அழைத்துக் கொண்டி ருக்கிறார். “**கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்தி லும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே**



ஆரோக்கியமான உபதேசம் –தீத்து 2 : 1–15.

**அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்."** "**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக் காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.**" (லூக். 16 : 10; மத். 25 : 23).

இந்த காரியத்தையும் அதின் பாடத்தையும் கிறிஸ்தவர்களல்லாத உலகத்தின் நடை மற்றும் சீர்கேடான சிந்தனைகளை எடுத்துக் காட்டும் முறையில் ஆராய்வோம். சில நேரங்களில் கிறிஸ்தவர்களும்கூட "**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்**" என்று மத். 6 : 33-ல் உள்ள தேவனுடைய வார்த்தையை தனக்கு நினைவுப் படுத்திக் கொள்ள வேண்டும். தேவனை அறிந்து பூரணமாக பிரதிஷ்டை செய்திருக்கிற கிறிஸ்தவர்களான நாமும் யேகோவாவின் மகிமையான ராஜ்யத்திலும், அதின் நீதியிலும் ஒரு பங்கடைவதை எதிர்பார்த்திருக்க வேண்டும். அந்த நீதி உலகத்திற்கு தேவைப்படுவதோடு, ராஜ்யத்தின் வேலையில் பங்கடைகிறவர்கள் அனைவரும் அந்த நீதியை அடைந்திருக்க வேண்டும். இதுவே நாம் முதலாவதாகவும், பிரதானமானதாகவும் நாட வேண்டும் மற்றும், வாழ்க்கையின் எல்லாவிதமான பரீட்சைகளிலும், கஷ்டங்களிலும் திருப்தியுடனிருக்க வேண்டும். நமது பரமபிதா நன்மையான காரியங்களைத் தர மறுப்பதில்லை என்றும், இன்பமானாலும், துன்பமானாலும், பரீட்சைகளானாலும், ஆசீர்வாதங்களானாலும் சகலத்தையும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே அவர் நடத்துவார் என்றும், வாழ்க்கைக்குத் தேவையானவைகளையே நமக்குக் கொடுக்கிறார் என்றும், அவருடைய ஞானத்தின்படி பூமியில் ஸ்தாபிதமாவதற்காக வந்து கொண்டிருக்கும் அவருடைய ராஜ்யத்தில், நமக்காக அவர் வைத்திருக்கும் பணியிடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும், நிச்சயப்படுத்திக்கொள்ள, நமக்கு உதவும் படியாகவே ஏற்படுத்துவார் என்றும், நமது பரமபிதாவினுடைய ஞானத்திலும், கிருபையிலும் நம்பிக்கையுடனிருக்க வேண்டும்.

மகா உபத்திரவ காலத்தைக் குறித்து, இந்த நாளிலும்கூட மானிட சமுதாயத்தில் தேவபக்தியற்ற நிலைமை பெருகியிருக்கும் என்று தேவனுடைய வார்த்தை (வேதாகமம்) நமக்கு நிச்சயப்படுத்துகிறது. பல்வேறு வகையான செய்தித்தொடர்பு வசதிகள் மேலும் மேலும் சீர்கேடடைந்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சீர்கேடுகளை சந்திப்பதினால், நீதியாகவும், தெய்வீக கோட்பாடுகளோடும் வாழ்வதற்கு நாடும் இளைஞர்களுக்கும் (மற்றவர்களுக்கும்) அதிகமதிகமாகக் கடினமாயிருப்பதுடன், சோதனைகள் அதிக பெலத்துடனிருப்பதால் தெய்வீகக் கோட்பாடுகளை கிட்டத்தட்ட கைவிட்டு, உலகத்தினுடைய இழிவான நடத்தையின் எண்ணங்களின்படி வாழ்கிறார்கள். நவ நாகரீக சமுதாயத்தில் உள்ளும் புறமும் கஷ்டங்களையும், சோதனைகளையும், மன அழுத்தங்களையும் சந்திக்கிற இளைஞர்களோடு நாங்களும் ஆழ்ந்த அனுதாபங்கொள்கிறோம். அனைத்துப் பள்ளிகள், விசேஷமாக கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வி முறைகள் மற்றும் நவ நாகரீக சமுதாயத்தில் பல்வேறு வழிகளிலும் இதனைச் சந்திக்கிறார்கள். இவற்றில் பரிணாமவாதம், தேவனை அறிய முடியாது என்ற கொள்கை, மனித நேயம், நாஸ்திகம், மாற்றுபாலினம், ஓரினச்சேர்க்கை போன்றவற்றுக்கு அதிக அனுகூலமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மேலும் இவற்றில் தேவன், வேதாகமம் மற்றும் அதின் கோட்பாடுகள் மீது சார்பாயிராதவைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகிறது. மேலும் அதின் 'புதிய வாழ்வு நெறியினால்' நீதி நெறியின் தரங்கள் மிகவும் தாழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைய குழந்தைகள் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கைச் சூழலில் பிறக்கிறார்கள். மிக இளவயதிலே அவர்களது கரங்களில் அதிகமான மின்னணு சாதனங்கள் கொடுக்கப்படுகின்றன. அநேகமாக மிகவும் பிரசித்தி பெற்ற மின்னணு கருவியாக ஐ-ஃபோன் இருக்கிறது. இந்த ஃபோனை நடக்கும் பொழுதும், வாகனங்களை ஓட்டும்பொழுதும் கரங்களில் பிடித்திருப்பது அவசியமான வழக்கமாயிருக்கிறது போன்ற தோற்றத்தை இளங்குழந்தைகள் காண்கிறார்கள். ஏனெனில் தங்களது பருவம் துளிர்விடும் வளர் இளம் பருவ வருடங்களின் போது (முன்பதாகவே கூட) தனிப்பட்ட அடையாளத்திற்காகவும் மற்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் போராடிக் கொண்டிருப்பதினால், அவர்களுடைய சகாக்களினால் கடுமையான மன அழுத்தம் இருக்கிறது. குறிப்பாக மற்றவர்களைவிட தங்களை

உயர்வானவர்களாகக் கருதுவதினால், இளைஞர்கள் பெற்றோரையும், மற்ற அதிகாரத்திலிருப்பவர்களையும் எதிர்க்கிறவர்களும், கீழ்ப்படிய மறுப்பதோடு, நெடுங் காலமாக நடைமுறையிலிருக்கும் நடத்தை நெறிகள், கட்டளைகள் மற்றும் மதம் சார்ந்த முக்கியத்துவங்களுக்கு எதிரானவைகளைத் தோற்றுவிக்கிறார்கள். பருவ வயதி னரின் கலாச்சாரம் அவர்களைச் சுற்றிலும் மிகவும் விரும்பத்தக்க அநேகக் காரியங்களை கொடுத்துக் கொண்டிருந்தாலும் அவைகள் தவறென்றும் விரும்பப் படத்தகாதவைகள் என்று சொல்லப்படுவதால் தங்களது சகாக்களால் ஏற்றுக் கொள்ளும்படிக்கு, இது அவர்களில் அநேகரை இதுபோன்ற காரியங்களில் பிரவேசிப்பதற்கு, விருப்பத்தையும் அதீத ஆசையையும் தூண்டி எழுப்புகிறது.

**கர்த்தருடைய மெல்லிய சத்தத்தையும் எப்போதும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் கூர் உணர்ச்சியுடைய செவியுள்ளவனாயிரு.**

உலகப்பிரகாரமான இசை இளைஞர்களுக்கான பொழுதுபோக்காக அமைக்கப்படுகிறது. அதின் வார்த்தை கள் மற்றும் அதனோடு வரும் குறும் படங்கள் அவர்களில் பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகிறது. இவை இரண்டுமே தேவனுக்கும், பெற்றோருக்கும், மற்ற அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் கீழ்ப்படியாமல் எதிர்க்கிற, எதிரான மனோபாவங்களை அடிக்கடி ஊக்கப்படுத்துவதோடு, எல்லா வழிகளிலும் கட்டுப்பாடற்றவைகளை ஊக்க மளிக்கவும் அனுமதிக்கிறது. அநேக பாடல்கள் பாலுணர்வு களை வெளிப்படையாகவும், வக்கிரமான ஆபாச பாலுணர்வு செயல்பாடுகள், கொடுவெறிக் காமம், அடிமைத்தனம், பலாத்காரம், ஓரினச் சேர்க்கை முதலிய வற்றை ஊக்கப்படுத்துகின்றன. மற்றபாடல்கள் மற்றும் "திரைப்படங்கள் வன்முறை, ஆவி மார்க்கம், பிசாசின் குணங்கள் மற்றும் சாத்தானை தொழுவது போன்ற வற்றைப் பரிந்துரைக்கின்றன. மேலும் தேவனையும், கிறிஸ்துவையும் மற்றும் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை அவமதிப்பதாகவும் அல்லது சிறிதளவாவது சீரத்தையும், மத சம்பந்தமான மனக் காட்சிகளையும் நம்ப முடியாததாகவும் கோரமாக்குவதாகவும் இருக்கின்றன. உண்மையில் நமது பொன்னான பிரதிஷ்டையின் நேரத்தை செலவழித்து காணத்தக்கதான ஒரு நிகழ்ச்சியை தொலைத்தொடர்பு தொலைக்காட்சியில் ஜாக்கிரதையோடு தேடிக் கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அநேக கிறிஸ்தவம் அல்லாத முக்கியத்துவம் பெற்றுவருகிற மத சிந்தனாவாதம் சில பெயரளவான கிறிஸ்தவர்களை தேவனை அறிய முடியாது என்ற கொள்கைக்கும், நாஸ்திகத்திற்கும் வழிநடத்துகிறது. அநேக ஜனங்கள் தங்களது செவிகளில் பரிணாமவாதக் கொள்கைக்காரரின் கோட்பாடுகளைக் கேள்விப்பட்டு தூண்டப்படுவதனால் வேதாகமத்திலுள்ள சிருஷ்டிப்பின் காரியங்களை சந்தேகிக்கத் தொடங்குகிறார்கள். இது வழக்கமாக வேதாகமத்தின் மற்ற காரியங்களையும் சந்தேகப்படுவதற்கும் வேதாகமம் தேவ ஆவியினால் எழுதப்பட்டது என்பதையும், மனுக்குலத்திற்கான அவருடைய வெளிப்படுத்தல் என்பதையும் படிப்படியாக நிராகரிப்பதற்கும் வழிநடத்துகிறது. அநேகர் வேதாகமம் பல்வேறு பிற மதங்களின் புனித புத்தகங்களுக்கு ஓரளவு சமமாக இருக்கிற, நல்ல நீதிநெறி வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய மற்றுமொரு பழைய புஸ்தகம் என்று எண்ணும்படி வழிநடத்தப்படுகிறார்கள். இன்றைய பொதுஜன பள்ளிகளின் உபதேசங்கள் மற்றும் எண்ணங் களின் போக்கு, தேவனையும், வேதாகமத்தையும் விசுவாசிப்பதிலிருந்து தூரமாய்விலகியிருப்பதோடு, மாறாக உலகப்பிரகாரமான மனித நேய மார்க்கத்தை பின்பற்றுகிறது. அநேகர் தேவனையும், வேதாகமம் அவருடைய வெளிப்படுத்தல் என்றும் தாங்கள் விசுவாசிக்கிறோமா, இல்லையா என்பதை அறியாதவாறு, தேவனைப் பற்றிய அறிந்து கொள்ள முடியாது என்ற கொள்கையில் இருக்கும்படியாக நடத்தப்பட்டிருக்கி றார்கள். சிலர் இவ்வாறு தேவன் இருப்பதை மறுதலித்தும், தங்களது ஜீவியத்தில் வேதாகமம் எந்த ஒரு தாக்கத்தை யும் ஏற்படுத்தாதவாறு அசட்டை செய்தும் நாஸ்திகர்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஏன் தேவன் இருக்கிறார் என்றும், வேதாகமத்தை நாம் பின்பற்று வதற்கு வழிகாட்டும் அவருடைய போதனைகளடங்கிய புத்தகமாக ஏன் விசுவாசிக்க வேண்டும் என்பதற்கும் அநேக காரணங்களும் இருக்கின்றன. யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு என்ற புத்தகத்தில் அத்தியாயம் 2, 3 மற்றும் தேவன் (God) என்ற தலைப்பு கொண்ட எங்களது புத்தகத்தில் அத்தியாயம் 1, 7 மற்றும் நாம் ஏன் தேவன் இருக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும் என்ற எங்களது இலவச சிறு புத்தகத்தையும் பார்க்கவும். "**அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன், அதைத் திட்டம் பண்ணினேன். அதைச் செய்து முடிப்பேன்**" என்று யேகோவா கூறுகிறார். (ஏசா. 46 : 11).

மின்னஞ்சல் (e-mail) மற்றும் குறுந்தகவல்களின் (sms) பயன்பாடுகளினால் அநேகர் கலந்துரையாடலின் கலையை இழந்துவிட்டார்கள். ஒரே மேஜையில் அமர்ந்து கொண்டு, தங்களுடைய வாயால் பேசுவதைவிட ஒருவொருக்கொருவர் குறுந்தகவல்களினால் பேசுவது என்பது வாடிக்கையாகிப் போய்விட்டது. அமெரிக்க

சொல்லகராதியானது (vocabulary) "texting lingo" எனப்படும் குறுந்தகவல் வார்த்தைகளால் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அபச்சாரமான கெட்டவார்த்தையானது பல வருடங்களாக மனுக்குலத்தின் சொல்லகராதியில் சேர்க்கப்பட்டும் இப்போது, ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கிறது. இது சாத்தான் உபயோகிக்கும் இன்னொரு கருவியாயிருக்கிறது. கெட்டவார்த்தையானது, இன்று பல பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மற்றும் பிறருடனான சமூக தொடர்புகளிலும் ஏற்றுக் கொள்ளப்படவும் உபயோகிக்கப்படவும் செய்கின்றது; சில பள்ளி ஆசிரியர் கள்கூட கெட்டவார்த்தையையும், ஆணையிடுதலிலும், சாக்கடையான வழக்கச் சொற்களுடன் உபயோகப் படுத்துகிறார்கள். தீமையான காரியங்களை தூண்டவும், தீமையான மற்றும் ஒழுங்கீனமான செயல்களை செய்யவும் விதமான கெட்ட ரசனையான மற்றும் மோசமான ஜோக்குகளும் இருக்கின்றன. இவ்வகை யான வார்த்தைகள் பொறுத்துக் கொள்ளப்படாத இல்லங்களில் இருப்பவர்களுக்கு இது உடனடியாக பெரிய பிரச்சனைகளை உருவாக்குகிறது. இது பொதுவாக, மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக செய்யப் படுகிறது; கெட்ட வார்த்தையை விட்டுவிடவும், அதை விட்டுவிட்ட பின்பு, அதே விதமான இன்னொரு வார்த்தையை உபயோகிக்க தொடங்குவதுமான சலனம் அதிகமாக இருக்கின்றது. கெட்டவார்த்தையின் உபயோகம் எங்கும் நிறைந்து இருக்கிறது; இது அடிக்கடி கேட்கப்படுகிறதால், ஒருவருடைய சுயநினைவுக்குள் ஊடுருவி அவர்களுடைய மனதில் தங்கி விடுகிறதாய் இருப்பதால், இதனுடைய உபயோகம் தீவிரமாக இல்லாவிடிலும், இது அந்த நபரிடத்திலே தங்கி, பின்னாளில் ஒரு அழுத்த சூழலில் வெடிக்கலாம்.

அடிக்கடி, கெட்டவார்த்தையின் உபயோகத்தை கைவிட்டவர்களால், தங்களை சரியாகவும், வலுவாகவும் வெளிப்படுத்த இயலாததால், தங்களுடைய அகங் காரத்தை உயர்த்திப் பிடித்து மற்றவர்களை தாழ்த்து வதற்காக கெட்டவார்த்தையை மீண்டும் உபயோகிக்கி றார்கள். சிலர் கெட்டவார்த்தையின் உபயோகமில்லாமல், எதையும் அழுத்திக் கூற இயலாதவர்களாய் இருக்கி றார்கள். பல காரியங்களில், கெட்டவார்த்தையை திரும்பத் திரும்ப உபயோகித்தலினால், ஒருவன் அந்த வார்த்தைகளின் நேரடியான அர்த்தத்தின் உணர்வை இழந்து, பின்பு தன்னுடைய பேச்சில் தான் வெளிப்படுத்திய அருவருப்பை உணராதவனாயிருக்கி றான். அடிக்கடியான கெட்டவார்த்தையின் உபயோகம் அல்லது ஒப்புதலானது ஒரு சமூக ஒழுங்காக மாறி இருக்கிறதை நாங்கள் உணருகிறோம். எனவே ஒரு உறுதியான தீர்மானத்தின் உபயோகத்திற்காக நாங்கள் வாதாடிக் கொண்டிருக்கிறோம்.

வயோதிக மற்றும் இளைஞர்களான உலக மனுக்குலமானது சமாதானத்தையும் இன்பத்தையும் நாடுவதில் பலர் மதுபானத்துக்கும், புகையிலை மற்றும் போதை மருந்துகளுக்கும் சட்ட விரோதமான பாலியல் செய்கைகளுக்கும் திரும்புகின்றனர். இளைஞர்களின் சட்ட விரோதமான போதை மருந்தின் உபயோகம் மற்றும் சேர்ந்து வாழும் வாழ்க்கைப் போக்கைப் பற்றிய விசாரம் இருந்தாலும், பல இளைஞர்கள் பள்ளியிலும், வீட்டிலும் வேலையிலும் மையம் கொண்டிருக்கின்றனர். புகை யிலை, போதைப்பொருட்கள், மதுபானம், விக்கோடின், எக்ஸ்டசி, கோகைன், பென்சைக்லிடின் (PCP), ஆக்சிகோன்டின் மற்றும் மனநிலை மருந்துகளின் உபயோகம் உலகத்தில் பெருத்து காணப்படுகிறது. அரசாங்கத்தின், தற்போதைய புள்ளி விவரப்படி 20.4 மில்லியன் அமெரிக்க மக்கள் சட்ட விரோதமான சில வகை மருந்துகளை உபயோகிக்கிறார்கள். ஏறத்தாழ 8.3 சதவிகித 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதான அனைத்து மக்களும் சட்ட விரோமான அல்லது மருத்துவம் சாராத உபயோகத்திற்கு பரிந்துரைக்கப்படும் மருந்துகளை உபயோகிக்கிறார்கள். அநேகர் கீழான கலாச்சாரத்துடைய அணுகுமுறை, பாணி, மற்றும் வழக்கத்தை ஏற்றுக்கொண்டு, சோதனைக்காக பயன்படுத்தப்படும் சட்ட விரோதமான மருந்துகளையும் ஏற்றுக் கொள்கின்றனர். அநேக மக்கள் போதை மருந்துகளை எடுத்துக் கொள்வதற்கான பிரதான காரணம் அவர்கள் சந்தோஷத்தை அனுபவிப்பதற்கே ஆகும்; இருப்பினும், எல்லா போதை மருந்துகளும் அதன் உபயோகதிற்கு அவர்களை அடிமைப்படுத்தும் தன்மை யுள்ளவையாகவே இருக்கின்றன. மேலும் அநேக இளைஞர்கள் இயற்கையாகவே வித்தியாசமான அனுபவங்களில் ஆர்வமும் அவற்றை அனுபவிக்க விருப்பம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். சிலருக்கு, போதை மருந்துகள் அவர்களுடைய உரையாடலுக்கு முக்கியமாயிருக்கின்றன. அவைகளை பற்றி பேசுதல் சுவாரஸ்யமாயும் எல்லாரையும் வசீகரிக்கிறதாயும் இருக்கிறது.

**நம்முடைய குணாதிசயங்களின் மூலமாக நாம் தேவனுடைய மகிமையைப் பிரதிபலிக்கிறோம்.**

பல்வேறு சீர்கேட்டினாலும், அதிகபட்ச வேலை வாய்ப்பின்மையினாலும், அடிப்படை வசதியின் சாதாரண சேவைகள் பாதிப்படைந்து இருக்கும் சூழ்நிலை கொண்ட குறைந்த தரமான வீடுகளினாலும் பாதிக்கப்படுகிற

நிலைமையில் வாழும் அநேக இளைஞர்கள் மோசமான வளங்களுடையவர்களாய் இருக்கிறார்கள். இத்தகைய சமூகத்தில், மற்றும் பொருளாதாரமான போதை மருந்துகளின் பட்டுவாடா மற்றும் விருத்தியடையும் அளவில் அடிக்கடி உபயோகித்தல் ஆகியவை வலிமை மிக்க குற்றவாளிகளின் அதிகாரத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட சமூகத்தின் அழுத்தமான மற்றம் சலிப்பூட்டும் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒருவருடைய போதை மருந்தின் உபயோகத்தோடு, மோசமான வேலை வாய்ப்புகளோடு இருக்கும் இளைஞர்கள், சிறிய அளவிலான போதை மருந்து பட்டுவாடா வர்த்தகத்தின் பொருளாதார அளவிலான நன்மைகளையும், அதன் மூலம் அடையக்கூடும் அந்தஸ்துகளையும் உணரு கிறார்கள்.

இருப்பினும், போதை மருந்தின் உபயோகமானது, சீர்கேடடைந்திருக்கும் நகர்புற பிரதேசத்தை மட்டுமே எல்லையாக கொண்டு இருக்கவில்லை. பத்திரிக்கை கட்டுரைகளில் தனியார் பள்ளிகளிலும் கிராமப்புற பகுதிகளிலும் காண்பிக்கப்படுகிற வண்ணமாக, போதை மருந்தின் உபயோகமானது, நம்முடைய சமூகத்தின் மேலிருந்து கீழாக எல்லா பகுதியிலும் ஒரு அம்சமாய் இருக்கிறது. சில இளைஞர்கள், குறிப்பாக, திருப்தியற்ற தொடர்புகளால் ஏற்படும் அதிர்ச்சி மற்றும் வலிகளையும் மற்றும் சந்தோசமற்ற இல்லங்களில் வாழுவதால் எழும்பும் உடல்ரீதியான மற்றும் மனரீதியான கொடுமைகளையும் எளிதாக்க போதை மருந்துகளை உபயோகிப்பார்கள். உறுதியான தீர்மானம் இல்லாத ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆம், உலகமானது, எல்லாரையும் அனுமதிக்கவும், எல்லாரும் ஏற்றுக் கொள்ளப்படவும், நடத்தையின் தரத்தை மேலும் மேலும் குறைக்க விருப்பம் கொண்டிருக்கிறது.

> **மற்றவர்கள் என்னைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதைவிட தேவன் என்னைக் குறித்து என்ன நினைக்கிறார் (அறிவார்) என்பதே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.**

தடையிலிருந்து விடுபடவும், ஒரு மேலான விதமான, மன நுண்ணுணர்வையும், மன உணர்ச்சியை யும் பெறவும், அல்லது சிறந்த அல்லது கூடுதலான சமூக மனநிலைக்குள் தங்களை ஈடுபடுத்தி கொள்ளவும், அடிக்கடி, மதுபான வகைகளை குடிக்கவும் அல்லது மன நிலையை மாற்றும் மருந்துகளை உபயோகிக்கவும் மக்கள் மயக்கப்படுகின்றனர். இது மதுபானத்தையோ அல்லது போதை மருந்துகளையோ உபயோகிக்க மறுக்கும் ஒருவருக்கும் மிகவும் உண்மையாக இருக்கிறது; அவனோ அல்லது அவளோ, புகழை இழந்துவிடுவார்கள் என்று பயப்படலாம். மேலும் பொதுவாக இயல்புக்கு மாறான வர்கள் என்றும் கருதப்படலாம். பல விலையுயர்ந்த பரவலான பரப்பப்பட்ட, மேலும் வஞ்சகமான விளம் பரங்கள், சேர்ந்து மதுபானம் குடிப்பது நாகரீகமானது என்றும் அதிநவீன மக்கள் செய்யும் செயல் என்றும் தோன்றச் செய்கின்றன. ஆனால் வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தையை நினைவில் கொள்வோம். (நீதி. 20 : 1) : "**திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம், அமளி பண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல.**"

மதுபானம் மற்றும் "கடின" போதை மருந்துகள் அடிமைப்படுத்துபவை என்று போதுமான ஆதாரத்தைவிட அதிகமாக ஆதாரம் இருந்தாலும், தங்களால் கட்டுப்படுத்த முடியும் அல்லது தங்களுடைய இன்பத்திற்காகவே மட்டுமே அனுபவித்து, அடிமைத்தனத்தில் இருந்து தப்பிக்க தங்களால் அதனை மட்டுப்படுத்த முடியும் என்று எண்ணி இன்னும் அநேகர் தங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல காரியங்களில், போதை மருந்தானது அதனுடைய தொடக்க ஆக்கபூர்வமான (நேர்மறையான) அனுபவத்தின் மூலம் அதில் ஒழிந்திருக்கும் தீமையை மறைப்பதினால், இந்த தவறான யோசனையானது ஊக்கப்படுத்தப்படுகிறது. உதாரண மாக, கொக்கைன் (cocaine) எனும் போதை பொருள், அதனை புதிதாக உபயோகப்படுத்தும் ஒருவருக்கு, உச்சபட்சமான ஆற்றல், நோக்கம், விழிப்புணர்வு ஆகிய உணர்வுகளையும், சிந்தனைகள் மற்றும் செயலை ஒருங்கிணைக்கும் தன்மையை தருவதாகவும், சோர்வை தவிர்ப்பதாகவும் தோன்றுகிறது. ஆனால், அதனை தொடர்ந்து உபயோகிப்பது, உடனடியாக அதிகமதிகமான மருந்தளவை சார்ந்திருக்க செய்து, அது தொடக்கத்தில் உதவுகின்றது என்ற நம்பி ஏமாந்த ஒருவரை அழிக்க தொடங்குகிறது. கொக்கைன் எனும் போதைப் பொருளின் உபயோகம் பிரபலமானதாகவும், விலையுயர்ந்ததாகவும், ஆபத்தானதாகவும் இருக்கிறது.

உலகளாவிய அளவில், மது பானத்தையோ அல்லது பல்வேறு கடின போதை மருந்துகளையோ தொடர்ச்சியாக சமூகமாக உபயோகிக்கும் அநேக மக்கள், அதிகமாக இளைஞர்கள், அதன் தொடர்ச்சியான உபயோகமானது, அதிகப்படியாக அதனை சார்ந்து இருக்கும் சார்பு நிலையை விளைவித்து, தவிர்க்க முடியாத அதன் அதிகப்படியான உபயோகம் இன்னும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனும் நன்கு அறிந்த உண்மையை கருத்தில் கொள்வதில்லை. மதுபானத்திலோ அல்லது போதை மருந்துகளிலோ அடிமையாகி விழுந்துபோன ஒருவன் மன நிலையை மாற்றுவதற்கு அல்லது அதை வெறுமனே சமாளிப்பதற்கு, எவ்வளவு அதிகமாக அதை உபயோகிக்கிறானோ, அவ்வளவு அதிகமாக, நாட்கள் செல்ல செல்ல, மனச் சோர்வடைந்தவனாகவும், பதட்டம் நிறைந்தவனாகவும், பயமற்றவனாகவும் மாறுகிறான்.

“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்.” நீதி. 1:7.

இந்த பழக்கத்தை தொடர்வதற்கான செலவு அதிகமதிகமாகவும், குற்ற உணர்ச்சி அதிக ஆழமாகவும் மாறுகிறது; அது அதிகப்படியான பொய்க்கும், ஏமாற்று தலுக்கும், கடை திருட்டு மற்றும் மற்ற வகையாக திருட்டிற்கும், கொள்ளை மற்றும் அதன் தொடர்புடைய எல்லா வகையான பயமற்ற செயல்களுக்கும் வழிநடத்துகிறது. அப்படிப்பட்ட பயமற்ற சட்ட விரோதமான செயல்கள், அடிக்கடி, கைதுகளையும், சிறைகளையும் அனுபவிக்கச் செய்கிறது; அது இன்னும் கூடுதலாக, சுயமரியாதையை (தன்மானத்தை) இழக்கச்செய்து, அதை உபயோகிப்பவர்கள், மன ரீதியாகவும், சரீர ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் மற்றபடியும் அதிக அதிகமாக பாதிப்புக்குள்ளாகிறார்கள். இது அவர்களை பயங்கரமான விளைவுக்கு, அதாவது இழிவான நிலையிலும், பாதி மயங்கிய நிலையிலும் இருக்கும் நிலைமைக்கும் வழிநடத்தி, அடிக்கடி மரணத்துக்கும் வழிநடத்துகிறது.

அரசாங்கங்கள் மற்றும் உயர் நீதிமன்றங் களுடைய ஆணையினால், தரம் தாழ்த்தப்படும் சன்மார்க்க நெறிமுறைகளுள்ள காலத்திலும், இன்னும் ஒரு காலத்தில் ஓரளவில் தடையாக பெருத்து இருந்த கிறிஸ்தவ போதனைகள் ஒதுக்கி வைக்கப்பட்ட காலத்திலும் நாம் வாழ்கிறோம். இது, குறிப்பாக, திருமணத்திற்கு முந்திய மற்றும் இதர சட்ட விரோதமான பாலியல் செய்கைகளில் ஈடுபடுவதற்கு கணிசமான அளவு சமூக, தனிப்பட்ட கலாச்சார அழுத்தத்தின்கீழ் இருக்கும் இளைஞர்களுக்கு இன்னும் பெரிதான அழுத்தத்தையே கொண்டுவருகிறது. பல கல்வியாளர்களும், இளைஞர் களை வழிகாட்ட நாடும் மற்றவர்களும் அப்படிப்பட்ட பாலியல் செய்கைகளுக்கு எதிராக பேசாமல், அதற்கு அனுமதி அளித்து இவைகள் சம்பவிக்கும் என்றும் அதை மன்னிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். திருமணத் திற்கு முந்திய மற்றும் இதர சட்ட விரோதமான பாலியல் செய்கைகளை தடுப்பதற்கு பதிலாக, அதன் விளைவான கருவுற்றலையும், பால்வினை நோய்களையும் எவ்விதம் எதிர்கொள்ள வேண்டும் என்ற விதத்தில் அவர்கள் இளைஞர்களுக்கு புத்திமதி கூறுகிறார்கள். பால்வினை நோய்களையும், கருவுறுதலையும் தவிர்க்கும் வரையில், திருமணத்திற்கு வெளியேயான பாலியல் செய்கை களினால் (மேலும் ஓரின சேர்க்கையினால்) தீமையான விளைவுகள் இல்லை என்ற விதத்தில் அவர்கள் தவறான அபிப்பிராயத்தைக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட சட்ட விரோதமான பாலியல் செய்கைகளை இயல்பானவை பொதுவானவை என்றும் இது சம்பந்தமாக, (மற்றவர் களின்) உதவியற்ற (பாதிப்பற்ற) ஒருவருடைய தீர்ப்பினால் ஒருவன் ஆளப்பட வேண்டும் என்ற திரிக்கப்பட்ட சிந்தனையானது கடுமையாக வாதிடப்பட வேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட்டால், கற்பை அழியாமற் பேணு வதற்கான ஒருவனுடைய தீர்மானம் உடைபடுகிறது.




சிறு பிள்ளைகளிடத்தில் பாலியல் வன்முறை செயல்களின் மூலமான இன்பத்துக்காகவும் மனித னுடைய மனம் தொடர்ந்து நாடுகிறது. மிகவும் விரும்பத்தகாத இந்த நடத்தையானது போட்டிருக்கும் அங்கியின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களால் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. சம்மதத்தோடு செய்யப்படும் வயது வந்தோர் இரண்டு பேர்களுக்கிடையேயான ஒழுங்கும், ஆதி. 2 : 24-ல் சொல்லப்பட்டிருக்கிற, “**இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்: அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்**” என்ற தேவனுடைய பிரமாணமும் ஒன்றே என்று சொல்லும் விதமாக, தேசத்தின் சட்டத்திற்கு பொருந்தும் விதத்தில், தேவனுடைய பிரமாணத்தை தேசத்தின் உயர் நீதிமன்றங்கள் மறுசீரமைக்கின்றன. பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நீதியின் தேவனுடைய போதனைகளை நிலை நிறுத்த உறுதியான தீர்மானத்தை எடுத்துக்கொள்ளக் கடவோம். இவ் விஷயத்தில் கிறிஸ்தவ சபைகள் சோம்பலாக இருக்கக் கூடாது. இருப்பினும் அரசாங்கங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்களின் ஆணையினால் சன்மார்க்க நெறிமுறைகள் தரம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றிய அரசியல் ஒழுக்கக்கேடுக்கு எதிராக அவர்கள் பேசி இருக்கும் போது, “சபையும் அரசும் பிரிந்திருக்க வேண்டும்” என்ற சத்தமானது “மத வெறியர்கள்” என்று சொல்லப்படும் அவர்களிடத்தில் ஆர்ப்பரிக்கப்படுகிறது. நாம் இந்த விவாதத்தை யேகோவாவின் வார்த்தையான மீகா 6 : 8, “**மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்: நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்:**” மற்றும் எபே. 6 : 10, “**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்**” என்ற வசனங்களோடு முடிக்கிறோம். ***

# தரித்து நில்லுங்கள்

*(Stand Still)*

**BS#355, Oct 1965**

இயேசு கிறிஸ்துவினுடைய ஓர் நல்ல போர்ச் சேவகன் நமது இரட்சிப்பின் அதிபதியின் சத்தத்தொனியை எல்லா நேரங்களிலும் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். நமது அதிபதி சில நேரங்களில் "முன்னேறிச் செல்லுங்கள்" என்றோ சில சமயங்களில் "திரும்பிச் செல்லுங்கள்" என்றோ சில சமயங்களில் "நில்லுங்கள்"- "தரித்து நில்லுங்கள்" என்றோ தமது கட்டளைகளைக் கொடுப்பார். அவரது வழிநடத்துதல்களுக்கு நாம் உடனடியாக கீழ்ப்படிய வேண்டும். "தரித்து நில்லுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ள வேத வசனங்களின் சில பாகங்களை இங்கே மேற்கோள் காட்டியுள்ளோம். அதோடுகூட வேறு சில முக்கியமான வசனங்களையும் வாசகர்களுடைய ஆசீர்வாதத்திற்காக பட்டியலிட்டிருக்கிறோம்.

**1) தரித்து நில்லுங்கள் :** "**இப்போதும் கர்த்தர் உங்களுக்கும், உங்கள் பிதாக்களுக்கும் செய்து வந்த எல்லா நீதியான கிரியைகளைக் குறித்தும் நான் கர்த்தருடைய சந்நிதியில் உங்களோடே நியாயம் பேசும்படிக்கு நீங்கள் தரித்து நில்லுங்கள்.**" 1 சாமு. 12:7 ஆங்கில வேதாகமத்தில் Stand still- தரித்து நில்லுங்கள் என்றே உள்ளது. "**வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.**" (ஏசா. 1:18; 43:25; அப். 3:20; ரோம. 4:5-8). "**சர்வ வல்லவரோடே நான் பேசினால் நல்லது. தேவனோடே நியாயத்திற்காக வழக்காட விரும்புவேன்.**" (யோபு 13:3).

**2) தரித்து நில் :** "**நான் தேவனுடைய வார்த்தையை உனக்குத் தெரிவிக்கும்படிக்கு நீ சற்றே தரித்து நில் என்றான்.**" 1 சாமு. 9:27). - "**கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்: உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்: – உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி என்னைப் போதித்தருளும். நீரே என் ரட்சிப்பின் தேவன்.**" (சங். 25:4,5,9,12-14; யாத். 33:13; ஏசா. 30:21; எரே. 33:3; யோவா. 16:13-15).

**3) தரித்து நின்று காத்திருந்து கேளுங்கள் :** (எண். 9:8). "**பொறுங்கள் கர்த்தர் உங்களைக் குறித்துக் கட்டளை இடுவது என்ன என்று கேட்பேன்.**" "**நீங்கள் செவி கொடுத்துக் கேளுங்கள். மேட்டிமையாய் இராதேயுங்கள் என்று கர்த்தர் விளம்பினார்.**" "**எனக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி ஆபத்துக்கு பயப்படாமல் அமைதியாயிருப்பான்.**" எரே. 13:15; நீதி. 1:33; ஏசா. 51:7; லூக். 9:35; 11:28; யோவா. 10:27; 15:3; 17:8, 14, 17-20; வெளி. 3:20,22.

**4) தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பார் :** (யோபு 37:14)- "**நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து உங்கள் முழு இருதயத்தோடும், உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள். அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.**" "**கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும் அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது.**" 1 சாமு. 12:24; சங். 111:2; சங். 8:3-9; சங். 50:22,23; உபா. 8:5; நீதி. 6:6; பிரச. 7:13; லூக். 12:24-31; 2 தீமோ. 2:7-10.

**5) நம்முடைய நிலையிலேயே தரித்து நிற்போம் :** 1 சாமு. 14:9 – "**ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.**" எபே. 6:13; யாத். 19:12; 1 கொரி. 12:18; 1 பேது. 4:15; நியாயாதி. 7:21; மல். 3:2.

**6) யோர்தானில் தரித்து நில்லுங்கள் :** (யோசு. 3:8) – "**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்.**" "**இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.**" சங். 23:4; மத். 28:20; எபி. 13:5; சங். 69:1,2,14-16).

**7) நீங்கள் தரித்து நின்று கர்த்தருடைய இரட்சிப்பைப் பாருங்கள் :** (யாத். 14:13) – "**நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள்.**" "**பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்.**" (2 நாளா. 20:17; சங். 46:10; ஏசா. 52:10; லூக். 3:6.)

***


*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



www.biblestandardindia.com FOR PRIVATE CIRCULATION ONLY